# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2318/24 - 2023 පෙබරවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.02.09

*2318/24 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) எனும் பிரிவின் கீழ் வாரியபொல பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வாரியபொல பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ், துணைத் தவிசாளர் பதவி வகித்த தென்னகோன் முதியான்சேலாகே அனுர சுதர்ஸன என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் துணைத் தவிசாளர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் வாரியபொல பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான துணைத் தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தெலிகட பள்ளிய குருகே அனுஷா நில்மினி செனெவிரத்ன என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

வாரியபொல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க முதியன்சேலாகே ஹரேந்தர பண்டார ரத்நாயக்க ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு தெலிகட பள்ளிய குருகே அனுஷா நில்மினி செனெவிரத்ன என்பவர் வாரியபொல பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ஆர். பீ. எச். எம். ரத்நாயக்க,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
வாரியபொல பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல்,
*2023*, பெப்புருவரி *06*.

EOG *02 - 0074*


1A - G 38798 — 16 (2023/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*